**வீரகெடிய பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வீரகெடிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 10 ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,888,601 தொகையினை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | ஆதனங்களின் அபிவிருத்திச் செலவுகளை மூலதனப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | முன்னைய ஆண்டின் போது 05 கடைகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 1,469,000 தொகையினை கணக்கீடு செய்திருக்க வில்லை. | பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் பெறும் பணம் உரிய காலத்தில் செலுத்தியிருக்காமையால் 2019 ஆண்டின் போது வாடகை உரிமையை இரத்துச் செய்வதற்கான நடைமுறையின் மீது நுழைந்திருப்பதால் சபைக்கு மேலும் பெற வேண்டிய தொகை ஒன்று என கணிக்காது கணக்குகளில் உட்படுத்தி இருக்கவில்லை என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,755,045 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | முத்திரைக் கட்டண வருமானத்தை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சபைக்கு கிடைத்திருந்த அட்டவணைகளின் படி கூட்டுத்தொகை ரூபா 13,775,224 தொகை கணக்கீடு செய்யப்பட்டதென அறிவிக்கின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 457,726,723 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 51,580,694 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பான துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டவணைகள் தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த வழுக்களின் காரணமாக வித்தியாசம் ஏற்பட்டிருந்த தெனவும் எதிர்காலத்தில் அவற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூலச் சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 145,626,591 தொகைக்கான 16 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(2) | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்து ள்ள முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை வருடாந்தம் இணங் கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் படி செயலாற்ற வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக)விதிக்கோவை<br>---------------------------------------- | | | |
| விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணைக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சரிசெய்தல் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>---------------------------------------- | | | |
| i. நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித் துள்ளதாக அறவிக்கின்றேன். |
| ii. நி.பி. 371(5) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் பெற்றி ருந்த ரூபா 135,555 இற்கான முற்பணம் வருட இறுதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தேர்தல் கடமைகளுக் காக பெற்றிருந்த ரூபா 125,555 தொகை தீர்க்கப்பட்டதுடன், மீதியான ரூபா 10,000 இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என அறிவிக்கின்றேன். |
| iii. நி.பி. 571 | காலங் கடந்த ரூபா 324,215 இற்கான வைப்பு க்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித் துள்ளதாக அறவிக்கின்றேன். |
| iv. நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பம் இடப்படும் உடன்படிக் கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித் துள்ளதாக அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| v. நி.பி. 1645 (ஆ), (இ) மற்றும் 1646 | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களில் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித்துள்ளதாக அறவிக்கின்றேன். |
| (ஈ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | |
| i. 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 19 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| ii. 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PED/REG/2015/08 பொது (i) இலக்கங் கொண்ட கடிதத்தின் பந்திகள் 4.3 (அ), (உ) | 2005 ஆண்டிற்கான ரூபா 9,264 ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் உரிய முறையில் அறவிடப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (உ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/ 2010/01 இலங்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05 | சபைக்கு சொந்தமான 26 கடையறைகளின் உடன்படிக்கைகள் நாளது வரை ஆக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய காலத்தில் உடன்படிக்கைகள் நாளது ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,595,351 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,601,699 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,854,000 | 2,993,291 | 3,035,100 | 4,924,579 | 1,740,000 | 1,909,941 | 1,364,750 | 4,966,389 |
| வாடகை | 23,856,000 | 25,602,292 | 23,225,245 | 5,583,533 | 17,356,000 | 17,165,685 | 10,500,898 | 3,206,486 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,163,000 | 1,886,919 | 1,951,199 | 62,087 | 1,787,000 | 1,724,170 | 1,688,086 | 126,367 |
| ஏனைய வருமானங்கள் | 11,891,000 | 20,133,194 | 15,317,785 | 62,527,505 | 10,153,000 | 13,261,847 | 5,742,832 | 32,969,481 |
| மொத்தம் | 40,764,000 | 50,615,696 | 43,529,329 | 73,097,704 | 56,537,200 | 34,061,643 | 19,296,566 | 41,268,723 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வீதவரி ரூபா 4,741,405 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் அந் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டிற்கான வரி அறவிடப்பட்டிருந்தது. | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு திருத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆண்டு முதல் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வியாபார வரி ரூபா 155,250 மற்றும் ஏக்கர் வரி ரூபா 27,925 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார வரி மற்றும் ஏக்கர் வரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபார வரி மற்றும் ஏக்கர் வரி முறையே ரூபா 6,000 தொகை மற்றும் ரூபா 504 தொகை அறவிடப்பட்டதுடன் மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மதிப்பீட்டு மற்றும் சிட்டையிடப்பட்ட வாடகை வருமானம் முறையே ரூபா 23,856,000 தொகை மற்றும் ரூபா 25,602,292 தொகையாக காணப்பட்டமையால், நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தல் மற்றும் புதிய வாடகை வருமான வழிகளை இனங்கண்டமையால் சிட்டையிடப்பட்ட பெறுமதி அதிகரித்திருந்த தென அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 15 கடையறைகளில் இருந்து மற்றும் சந்தையை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 112,370 தொகை மற்றும் ரூபா 5,432,413 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 05 கடையறைகளில் இருந்து ரூபா 35,800 தொகை அறவிடப்பட்டதுடன், மீதி நிலுவைத் தொகையை விரைவாக அறவிடப்படும் எனவும், நிலுவை சந்தை வாடகை அறவீடு செய்வதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். |

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,499,903 தொகை மற்றும் ரூபா 61,027,602 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அதிகாரி களிடம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய அனைத்து தொகையையும் பெற்றுக் கொள்வதற்கு பிரதான செயலாளருக்கு அறிவித்துள்ளேன் என அறியத் தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையின் மீது துணை விதிகள் ஆக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப் பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 71 அபிவிருத்தி திட்டங்களுக்காக ரூபா 7,100,000 தொகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 300,000 பெறுமதியான 03 திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. மேலும் பாதீட்டு மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத ரூபா 900,000 தொகை பெறுமதியான 09 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | பாதீட்டில் உட்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அதிவிஷேடமான விடயங்கள் மீது ஏற்படும் தேவைகள் மீது கவனம் செலுத்தி பாதீட்டு திருத்தங்கள் மேற்கொண்டு சபை அங்கீகாரத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன என அறிவிக்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு சம்பந்தப்பட்ட பல திட்டங்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டங்கள் ஊடாக நிறைவேற்றப்பட்டதுடன், நேரடியாக சுட்டிகளுக்கு இலக்காகிய திட்டங்களை தயாரித்து செயற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு இலத்திரனியல் நூலகத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 766,750 தொகை பெறுமதியான கணனி உபகரணங்கள் பயன்படுத்தாது இருந்ததினால் அவற்றின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தது. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நூலக அங்கத்தவர்களுக்கு பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கில் தேவையான உச்ச மட்ட அலுவல்கள் மேற் கொள்ளப் பட்டதுடன், பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டு எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்கு சொந்தமான தகனகூடம் செயற்படாமல் காணப்பட்டது. | பொதுநலன்புரி வசதிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

#### 3.3.1 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 14 மிகைப் பதவியணியினை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதும் மேற்கொள்ளப்பட வேண்டும். | 05 வெற்றிடங்கள் முதலமைச்சினால் நிரப்பப்பட வேண்டியதுடன், மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் 04 பேர் குறிப்பிட்ட பதவிகளுக்கு புறம்பான ஏனைய கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | உத்தியோகத்தர்களை அங்கீகரிக்கப் பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்காக முறையாக ஆட்சேர்த்த பின்னர் குறிப்பிட்ட ஊழியர்களை அவர்களுக்கு உரிய நிரந்தரப் பதவிகளில் இணைக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (இ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை மீளாய்வாண்டிற்காக மனிதவளத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி குறிப்பிட்ட உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்த வேலை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 04 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 03 வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ் காணப்படாமையால் வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதுடன், கைடிரக்டர் வழக்குப் பண்டம் ஒன்றாக காணப்படுவதால் அது ஓட்ட நிலையில் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 04 விளையாட்டுத் திடல்கள், 07 சனசமூக நிலையங்கள், 69 மயானங்கள் மற்றும் 06 வாகனங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 06 வாகனங்களில் 02 டிரக்டர்கள் தொடர்பான எழுத்துமூல தகவல்கள் காணப்படாமையால் உரித்தாக்கல் மேற்கொள்ள முடியாததுடன் மீதியான வாகனங்களை உரித்தாக்கு வதற்காக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதுடன் மயானங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் என்பவற்றை அளவை செய்வதற்காக நிதி ஏற்பாடுகள் இன்மையால் உரித்தாக்குதல் தாமதமாகியுள்ளதென அறிவிக்கின்றேன். |

### 3.4.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வலஸ்முல்ல சந்தைக்கு முற்பகுதியில் காணப்படும் 02 கடைகளின் மூலம் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் டெண்டர் மூலம் இந்த கடையறைகளை வழங்கு தவற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையினால் 2017 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த மூன்று முகாமைத்துவத் தகவல் முறைமைகளில் ரூபா 90,000 பெறுமதியான சுவடிக்கூட தகவல் முறைமை செயற்படாதிருந்ததுடன், இந்த முறைமையை நிறுவனத்தின் தேவைக்கு பொருத்தமான விதமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையான அபிவிருத்திகளை மேற்கொண்டு தரும்படி அதனை வழங்கிய நிறுவனத்திற்கு அறிவித்துள்ளேன் என அறியத் தருகின்றேன். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 495,540 இற்கான பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடங்கி இருக்காத கொள்வனவுகள் ஆகும். | ஆண்டிற்கான தேவைகளை இனங்கண்டு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | காலத்திற்கு ஏற்ப தேவையினை கவனத்தில் எடுத்து உரிய அங்கீகாரத்துடன் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | ரூபா 136,100 தொகை பெறுமதியான கொள்வனவுகள் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 5.6 இற்கு அமைவாக பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ரூபா 43,500 இற்கான மேலதிக செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |